1979 மார்ச் 16]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது அரசுக்குத் தெரியும். அதாவது தேர்தல் நடைமுறை நூலில் கூறப்பட்ட விதிமுறைகளுக்கு ஏற்ப அந்த அடிப்படையிலே தான் இவ்வாறு ஆண்டிக்ளாக்வைஸ் முறைப்படி இலக்கங்கள் இடப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இதில் தவறு ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சென்னை மு. அரங்கநாதன்: தலைவரவர்களே, அமைச்சரவர்களுடைய பதிலில் புதியதாக நிறைய வீடுகள், குடிசைமாற்று வாரியத்தின் மூலமாகவும், வீட்டுவசதி வாரியத்தின் மூலமாகவும் கட்டப்பட்ட காரணத்தால்தான் அவற்றின் இலக்கங்கள் மாற்றப்பட்டன என்று சொன்னார்கள். நான் அதை வரவேற்கிறேன். ஆனால் இப்போது புதிதாக சேர்க்கப்பட்ட பகுதிகளைத்தவிர மற்றைய நகரப்பகுதிகளில் இருந்த எண்களில் எந்த விதமான முறைகேடும் இல்லாத நிலையில்ஏன் இவ்வாறு எண்கள் மாற்றப்பட்டன? அதனால் பல குழப்பங்கள் ஏற்படுகின்றன. இது அடுத்த மாநகராட்சி தேர்தலிலே கூட மக்களுக்கு குழப்பங்களை உருவாக்கும் என்பதை அரசு அறிந்து இதனை மறுபரிசீலனை செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, ஏற்கெனவே 1961-லே கொடுக்கப்பட்ட கதவு இலக்கங்கள் தேர்தல் விதிமுறை நூலிலே குறிப்பிட்ட விதிமுறைகளைப்பின் பற்றிச் செய்யப்படவில்லை என்கிற காரணத்தால்தான் இவ்வாறு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். ஆகவே குழப்பம் ஏற்பட்டுத்தான் தெளிவு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வீரசோழன் ஆற்றின் குறுக்கே பாலம்.

*வினா எண். 428— திரு. இரா. இராசமாணிக்கம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) குத்தாலம் ஒன்றியத்தில் பழைய கூடலூர் சாலையில் வீரசோழன் ஆற்றின் குறுக்கே ஒன்றியப் பொது நிதியிலிருந்து பாலம் கட்டவும், வேலையை போக்குவரத்துத்துறை மூலம் செய்யவும் அரசு அனுமதி கோரி விண்ணப்பம் ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) & (ஆ) திட்டம் பரிசீலனையில் உள்ளது.